**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, கரூர்**
**முன்னிலை – திரு.எஸ்.பி.பரத் குமார், M.B.A.,L.L.M.,**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**
**2026 ம் வருடம், மார்ச் மாதம், 09 ம் நாள், திங்கள் கிழமை**
**குற்றவியல் பல்வகை மனு எண். 256/2026**

சசேந்திரன் (25/26)

த/பெ. குமார் மனுதாரர் / எதிரி

/ எதிர் /

தமிழக அரசுக்காக,

காவல் உதவி ஆய்வாளர்,

பசுபதிபாளையம் காவல் நிலையம்,

(குற்ற எண். 77/2026) எதிர்மனுதாரர் / புகார்தாரர்

இம்மனுவானது 09.03.2026 இன்று என் முன்னிலையில் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மனுதாரர் / எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.எஸ்.பி.ரவி,பி.ஏ.,பி.எல்., அவர்கள் ஆஜராகியும், பின்னிட்டு எதிர்மனுதாரர் / குற்றமுறையிடுபவர் தரப்பில் அரசு குற்றத்துறை உதவி வழக்குரைஞர் நிலை–2 அவர்கள் முன்னிலையாகியும், மனு மற்றும் ஆவணங்களை பரிசீலித்தும் இருதரப்பையும் கேட்டறிந்து இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கும்.

**உத்தரவு**

1. எதிரி மீது பசுபதிபாளையம் காவல்நிலைய கு.எண்.77/26, பிரிவு 296(b), 118(1), 351(3) BNS ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எதிரி பிணை கோரி பிரிவு 480 BNSS–ன் கீழ் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

2. மனுதாரர் / எதிரி தரப்பில் தாக்கல் செய்த பிணை மனுவில் 296(b), 118(1), 351(3) BNS பிரிவு என்பது பிணையில் விடமுடியாத குற்றம் என்பதாலும், மனுதாரர் / எதிரி கடந்த 02.03.2026 ம் தேதி கைது செய்யப்பட்டு இன்று வரை நீதிமன்ற காவலில் இருந்து வருவதாகவும், மனுதாரர் / எதிரி வேறு எந்த வழக்கிலும் ஈடுபடவில்லை எனவும், காவல்துறையினர் மனுதாரர் / எதிரி மீது தவறுதலாக வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், மனுதாரர் / எதிரி குற்றம் எதுவும் செய்யவில்லை என்றும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றும், மனுதாரர் / எதிரி இவ்வழக்கில் வேறு எந்த நீதிமன்றத்திலும் பிணை மனு தாக்கல் செய்யவில்லை எனவும், மனுதாரர் / எதிரி உரிய பிணையதாரர்களை முன்னிருத்துவதாகவும், நீதிமன்றம் விதிக்கும் நிபந்தனைகளுக்கு கட்டுப்படுவதாகவும், மனுதாரர் / எதிரி தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

3. அரசு மற்றும் காவல்துறை தரப்புக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்டு பதில்கள் பெறப்பட்டது. அரசு மற்றும் காவல்துறை தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆட்சேபணையில், இவ்வழக்கானது புலன் விசாரணையில் உள்ளதாலும், தடய சொத்தை ஒப்படைத்து ஆர்.பி.எண் பெற வேண்டியுள்ளதாலும், எதிரி வெளியே இருந்தால் சாட்சிகளை மிரட்டி அச்சுறுத்தக் கூடும் என்றும், இந்நிலையில் எதிரி வெளியே இருந்தால் மீண்டும் இதே போன்ற குற்றச் செயலை செய்யக்கூடும் என்பதாலும், சாட்சிகளை கலைக்க வாய்ப்புள்ளதாலும், நீதிமன்ற விசாரணையின் போது நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தலைமறைவாகக்கூடும் என்பதாலும், மனுதாரர் எதிரியை பிணையில் விட கடுமையான ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரர் / எதிரி தாக்கல் செய்துள்ள பிணை மனு, எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆட்சேபணை மற்றும் வழக்காவணங்கள் ஆகியவற்றை கவனமாக பரிசீலனை செய்யப்பட்டதில், மனுதாரர் / எதிரி கடந்த 02.03.2026 ம்

தேதி கைது செய்யப்பட்டு 8 நாட்களாக நீதிமன்ற காவலில் இருந்து வருவதாக தெரிய வருகிறது. ஆகவே மேலும் மனுதாரர் / எதிரியை நீதிமன்ற காவலில் வைக்க வேண்டிய அவசியமில்லை என்று இந்நீதிமன்றம் கருதுவதால் நீதியின் நலனை கருத்தில் கொண்டு, பின்வரும் நிபந்தனைகளின் அடிப்படையில் மனுதாரர் / எதிரிக்கு பிணை வழங்கி உத்தரவிடப்படுகிறது.

<u>நிபந்தனைகள்</u>

1. மனுதாரர் / எதிரி தலா இரண்டு ஜாமீன்தாரர்களும் ரூ.10,000/-க்கு பிணைப்பத்திரம் எழுதி கொடுக்க வேண்டும். மேலும், ஜாமீன்தாரர்கள் அடையாள சான்று கொடுக்க வேண்டும். ஜாமீன்தாரர்களின் புகைப்படம், கட்டைவிரல் ரேகை மற்றும் செல்போன் எண் ஆகியவை பிணைப்பத்திரத்தில் குறிப்பிடப்பட வேண்டும்.

2. மனுதாரர் / எதிரி பிணையில் சென்ற தினத்திலிருந்து எதிர்மனுதாரர் காவல் நிலையத்தில் தினமும் காலை 10.00 மணிக்கு 15 நாட்களுக்கு கையெழுத்திட வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

3. எதிர்மனுதாரர் புலன் விசாரணைக்கு மனுதாரர் / எதிரி ஒத்துழைப்பு கொடுக்க வேண்டும். சாட்சிகளை கலைக்கவோ அல்லது மிரட்டவோ கூடாது. பிணையில் இருந்து வரும் காலத்தில் மனுதாரர் / எதிரி இதே போன்ற குற்றச் செயல்களோ, சட்டத்திற்கு புறம்பான செயல்களையோ செய்யக்கூடாது. மேற்படி நிபந்தனைகளை மீறினால் இப்பிணை உத்தரவு இரத்து ஆகிவிடும்.

4. நீதிமன்ற விசாரணையின்போது மனுதாரர் / எதிரி தவறாமல் ஆஜராக வேண்டும். தவறும் பட்சத்தில் இந்திய தண்டனை சட்டம் பிரிவு 229-A ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்படும்.

2026ம் ஆண்டு மார்ச் மாதம் 9ம் நாளாகிய இன்று இத்திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1,**
**கரூர்.**